முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

சாட்சியின் சான்றுரை - PW1

EA.No.20/2019 in E.P.No.26/2013

ACP. 1/ 2010

பெயர்:திரு/திருமதி: பலராமன் நாள். 30.09.2019

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடரப்பட்டது.

குறுக்கு விசாரணை

நான் எஸ்.எல்.சி வரை படித்திருக்கிறேன். எது தவறு எது சரி என்பது எனக்கு தெரியும். கிரைய பத்திரம் எழுதினால் அதை பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். இங்கு தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆகியவை பதிவு செய்யப்படாத ஆவணம். எனக்கு சொந்த ஊர் புதுக்கடை. புதுக்கடை கிராமம் கடலூர் மாவட்டத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில்தான் பதிவு செய்ய வேண்டும். வளவனூர், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் ஸ்டாம் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் உள்ளார்கள். ம.சா.ஆ.1 பத்திரத்திற்கான முத்திரைத்தாள்கள் திருநாவலூரில் வாங்கப்பட்டுள்ளன. ம.சா.ஆ.2 பத்திரத்திற்கான முத்திரைத்தாள்கள் பண்ருட்டியில் வாங்கப்பட்டுள்ளன. ம.சா.ஆ.1ல் ஏற்கனவே ஒரு பெயர் அழிக்கப்பட்டு அதில் என்னுடைய பெயர் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. கிரையப்பத்திரம் மற்றும் ஒப்பந்தம் ஆகியவற்றை எழுதுயவரும், தட்டச்சு செய்தவரும் அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்யவேண்டும். ஆனால் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களில் அவ்வாறு கையொப்பங்கள் செய்யவில்லை. ம.சா.ஆ.1 ஆவணம் 17.09.2008ல் முத்திரைத்தாள்

வாங்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 ஆவணம் 16.03.2007ல் முத்திரைத்தாள் வாங்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 10.09.2010ல் எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 19.09.2011ல் ம.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்டுள்ளது. 2வது எதிர்மனுதாரர் குறித்து இந்த மனுவிற்கு பிறகுதான் தெரியும். மொட்டையன் உடையார் மகன் மனவாளனை தெரியும். 1வது எதிர்மனுதாரர் 2வது எதிர் மனுதாரருக்கு கடன் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் தீர்ப்பு பெற்று ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வழக்கறிஞர் சொல்லி கேள்விபட்டேன். நான் அரசிடம் உரிமம் பெற்று நெல் வியாபாரம் செய்தும் மற்றும் 4 லாரியும் கிரைய ஒப்பந்த காலத்தில் வைத்திருந்தேன். நெல் வியாபாரம் செய்யும் காலத்தில் வணிகவரி செலுத்தவேண்டும், நான் முன்பு செலுத்தினேன், தற்போது வியாபாரம் செய்யவில்லை. கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் வியாபாரம் செய்யவில்லை. நான் வருமாணவரி எதுவும் செலுத்தவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் 20 லட்சம் ரூபாய் கொடுத்ததற்கு ம.சா.ஆ.1 ஆவணம் ஆதாரமாக தாக்கல் செய்துள்ளேன். நானும், வீரபத்திரனும் மோசடியாக ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. மொட்டைய உடையார்தான் ஆவணங்களை தயார் செய்தார். மொட்டைய உடையார் தயார் செய்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இது உண்மையான ஆவணம் என்றால் தயார் செய்தவரும், தட்டச்சு செய்தவரும் கையொப்பம் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. மொட்டைய உடையாருக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லி ம.சா.ஆ.2 ஆவணத்தை பதிவு செய்ய சார்பதிவாளரை மொட்டைய உடையார் வீட்டிற்கு வரவழைத்து ஆவணத்தை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

மொட்டைய உடையார்தான் பதிவு செய்து கொடுப்பதாக சொன்னார். ம.சா.ஆ.2 கிரைய பத்திரம் ஏற்பட்டு 4 ஆண்டுகள் கழித்து 2015ல் மொட்டைய உடையார் இறந்துவிட்டார். அந்த 4 ஆண்டுகளாக அவகாசத்திற்கு பதிவு செய்ய நான் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவில்லை. வீரபத்திரன் மனைவி ஜோதிலட்சுமிக்கு மொட்டைய உடையார் மகன் மனவாளன் அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்து அவர் வீரபத்திரன் பெயருக்கு மனு சொத்தை பொறுத்து கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதிகாரபத்திரத்தில் என்னுடைய சொத்து குறிப்பிடப்படவில்லை, ஆனால் கிரைய பத்திரத்தில் என்னுடைய சொத்தின் சர்வே எண் குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார். ஜோதிலட்சுமி மனு சொத்துக்களை பொறுத்து 2வது எதிர் மனுதாரருக்கு கிரையம் கொடுத்த விவரத்தை நான் மனுவில் 5வது பேராவில் சொல்லியுள்ளேன். அந்த கிரையப்பத்திரம் மற்றும் பொது அதிகாரப்பத்திரம் ஆகியவை ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2க்கு முன்பாகவே ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 பத்திரம் எழுதப்பட்டுள்ளது. நான் வீரபத்திரனுக்கு பிரதிநிதியாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அவ்வாறு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆகியவற்றை யார் தட்டச்சு செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அதற்கான ஸ்டாம்பு பேப்பர்களையும் மொட்டைய உடையார்தான் வாங்கினார். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 பத்திரங்களை எழுதுவதற்கு முன்பு வில்லங்கம் எதுவும் போட்டு பார்க்கவில்லை. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களை பதிவு செய்ய மொட்டைய உடையாரின்

வாரிசுகள் பேரில் எந்தவித சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரு சொத்தை வாங்கவேண்டும் என்றால் அந்த சொத்தின் மூலப்பத்திரத்தை வாங்கவேண்டும் என்றால் சரிதான், ஆனால் மொட்டைய உடையாரிடம் மூலப்பத்திரத்தை வாங்கவில்லை. ராஜவேலு அசல் பத்திரங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.1 ஆவணத்தின் கீழ் 20 லட்சம் ரூபாய் கொடுக்கவில்லை என்றாலும், மொட்டைய உடையார் இந்த ஆவணத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணத்தையும் மொட்டைய உடையார் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களை வீரபத்திரன், ஜோதிலட்சுமியுடன் சேர்ந்து பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணம் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யாததால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் எந்த உரிமையும் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. பண்டசோழநல்லூரை சேர்ந்த ஒரு நபர் சொல்லிதான் ஜப்தி நடவடிக்கை பற்றி எனக்கு தெரியும். 30 லட்சம் ரூபாய் கொடுக்ககூடிய அளவிற்கு எனக்கு வசதியோ, வருமானமோ இல்லை என்றால் சரியல்ல. ராஜவேலு எடுத்த ஜப்தி நடவடிக்கையை ஆட்சேபிவிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. மனவாளன் என்பவர் ஜோதிலட்சுமிக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் உண்மையானது என்றால் இருக்கலாம். ஜோதிலட்சுமி வீரப்பத்திரனுக்கு எழுதிக்கொடுத்துள்ள பத்திரம் சரியானதல்ல, என்னுடைய சொத்தை சேர்த்து எழுதிக்கொடுத்துள்ளார்கள். வீரபத்திரன் என்பவர் சொத்து என்பதால்தான் ஜப்தி நடவடிக்கை எடுத்துவருகிறார் என்றால் சரியல்ல.

இன்றுவரை அந்த சொத்தின் அனுபவத்தில் நான்தான் இருந்து வருகிறேன், வீரபத்திரன் அங்கு இருந்துவருகிறார் என்றால் சரியல்ல. வீரபத்திரன்மீதோ, ஜோதிலட்சுமிமீதோ என் உரிமையை நிலைநாட்ட இந்த மனுவை தவிற வேறு நடவடிக்கை எடுக்கவில்லை. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்கள் உண்மையானது என்றால் அவர்களமீது நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. ஐப்திக்கு வரும்போதுதான் இந்த பிரச்சனை இருப்பது தெரியும். இந்த சொத்து மொட்டைய உடையாருக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. அவருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது. நான் வீரபத்திரனுடன் சேர்ந்துக்கொண்டு பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனுவின்மீது பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதில்லை என்றும், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கிரையப்பத்திரத்திற்கு பின்தேதியிட்டு கிரைய ஒப்பந்தத்திற்கான முத்திரைத்தாள்கள் உள்ளதால் அவை உண்மையான பத்திரங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மொட்டைய உடையார் இந்த ஆவணத்தை தயார் செய்யவில்லை என்றும், நான்தான் ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இந்த மனுவிற்கான வழக்கு மூலம் ஏற்படவில்லை என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.